W2

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),

**நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590**

**<u>ஆணை நாள் 06.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.S.A 2529/விசாரணை/E/2020</u>**

திரு. அ.கனகராஜ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் .. பொது அதிகார அமைப்பு
/உதவி ஆணையர்,
நிலஅளவை மற்றும்
நிலவரித்திட்ட இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை

******

**<u>ஆணை</u>**

1) இவ்வாணையத்தின் 20.03.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, சென்னை, சேப்பாக்கம், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரக அலுவலக கண்காணிப்பாளர் திரு ஏ.வெங்கடேசன் இவ்வாணையத்தில் 20.04.2026 அன்று ஆஜராகி, திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலரின் 17.04.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2) மேற்படி அறிக்கையில், மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத ஓய்வுப் பெற்ற முன்னாள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு எல்.ராஜசேகரன் மற்றும் ஓய்வுப் பெற்ற முன்னாள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு எஸ்.ஆர்.சுப்பையா ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்கள் இணைக்கப்பட்டிருந்தது.

3) திரு எல்.ராஜசேகரன் 16.04.2026 அன்று திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலரின் முன்னிலையில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளித்துள்ளார். திரு எஸ்.ஆர்.சுப்பையாவுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், தனது வாக்குமூலத்தை மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளார் மேற்படி இருவரும் அளித்துள்ள விளக்கத்தில்,

மனுதாரர் திரு கனகராஜ் என்பவரின் மனு தொடர்பாக, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் சென்னை நிலவரித்திட்ட அலுவலர் (தெற்கு) அவர்களிடமிருந்து எந்த கடிதமும் தாங்கள் பணிபுரிந்த காலத்தில் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட பிரிவுகளில் பெறப்படவில்லை என்றும், தங்கள் பணிக்காலத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவுகள் மற்றும் நோக்கங்களுக்கு உரிய மதிப்பளித்து, பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வந்துள்ளதாகவும், ஆகவே தங்களது விளக்கத்தை ஏற்று, தங்கள் மீதான நடவடிக்கையை கைவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

4) மேலும், இவ்வாணையத்தின் இரண்டாவது உத்தரவின்படி, மனுதாரருக்கு நஷ்டஈடாக ரூபாய் 5,000/-க்கான 20.04.2026 நாளிட்ட காசோலை அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, அதன் நகலும், மனுதாரர் அதனை பெற்றுக் கொண்டதற்கு தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகலும் இணைக்கப்பட்டிருந்தது.

5) குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்கள் இருவரும் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகையில்லை. எனினும், தற்போது பொறுப்பிலுள்ள பொதுத் தகவல் அலுவலர்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்க வேண்டுமென அறிவுறுத்த வேண்டுமென திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

6) இவ்வாணையத்தின் 20.03.2026 நாளிட்ட இரண்டு உத்தரவுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். S.A. 2529/விசாரணை/E/2020</u>

<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையர்,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை

திரு. அ.கனகராஜ்,
நாடார் தெரு, விளாத்திகுளம் - 628 907
தூத்துக்குடி மாவட்டம்

Copy to: File
CR/PA